# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை – 2020**
**General Certificate of Education (Ord.Level) Model Exam - 2020**

| நேரம்: 1 மணித்தியாலம் | தமிழ்மொழியும் இலக்கியமும் - I | பாட எண் : 22 T I |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................... | | |

**கவனிக்க:**
- *(1)* **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- *(2)* **1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "பேதைமை என்பது ஒன்று யாதெனில் ஏதம் கொண்டு ஊதியம் போக விடல்" இங்கு **ஊதியம்** என்பதன் பொருள்
   1. நன்மை 2. வரவு 3. தீமை 4. குற்றம்
2. "தண்பதியும் தாயமும் தான் தாரான் ஆகில்" என்பதில் **தாயம்** என்பதன் பொருள்
   1. அதிகாரம் 2. அகங்காரம் 3. தாயக்கட்டை 4. சதுரங்கம்
3. "படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்" இங்கு **படர்** என்பதன் எதிர்க்கருத்து
   1. இன்பம் 2. விழுதல் 3. துன்பம் 4. அன்று
4. "மையல் ஒருவன் களித்தற்றாற்" **மையல்** என்பதன் எதிர்க்கருத்து.
   1. மகிழ்ச்சி 2. தெளிவு 3. நாட்டம் 4. பித்து
5. பாணன் யாழை மீட்டினான். இங்கு **பாணன்** என்பதன் எதிர்ப்பாற்சொல்
   1. பாடகி 2. பாடினி 3. பாணி 4. குறத்தி

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத்தெரிவு செய்க**

6. கூட்டத்தைக் குறிக்கும் மரபுச்சொற்களில் பொருத்தமற்றது
   1. அறிஞர் - அவை
   2. யானை - தொகுதி
   3. மயில் - குழாம்
   4. உடு - திரள்
7. கொம்மியுனிற்றி (community) என்பதன் தமிழ் வடிவம்.
   1. இனம் 2. சாகியம் 3. கூட்டுணர்வு 4. மதிப்பீடு
8. பிஞ்சு, தழும்பு, காயம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   1. புண் 2. உடம்பு 3. அடையாளம் 4. வடு
9. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
   1. சிறுகதை - எழுத்தாளர்
   2. சினிமா - இயக்குநர்
   3. அரங்கு - காமரா
   4. ஓவியம் - ஓவியர்
10. புராதன பொருட்களைச் சேமித்து வைக்கும் இடம்
    1. அருங்காட்சியகம் 2. நிந்தகம் 3. ஒப்புரவு 4. நூதனசாலை

11. பின்வருவனவற்றுள் எதிர்ப்பொருள் தரும் இணைமொழி

1. மேடு பள்ளம் 2. வாடிவதங்கி 3. சீரும்சிறப்பும் 4. கூடமாட

12. மல்லுக்கட்டுதல் என்ற மரபுத்தொடர் தரும் கருத்து

1. வேட்டி கட்டுதல் 2. மோதித்தள்ளுதல் 3. வீண்பாடுபடுதல் 4. சீவனத்தைக் கெடுத்தல்

13 பாரசீக மொழிச் சொற்களுள் அடங்காத சொல்

1. முலாம் 2. போதி 3. சமுக்காளம் 4. அலாதி

14. உதவியவருக்கு தீங்கு நினைக்கக்கூடாது என்ற பொருள் தரும் பழமொழி

1. ஊர் உச்சம் வீடு பட்டினி 2. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை. 4. அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே

15. திக்குத்திசை தெரியாமல் அவதிப்படல் என்ற கருத்தைத் தரும் உவமைத்தொடர்

1. கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போல
2. சுழற்காற்றில் அகப்பட்ட துரும்பு போல
3. வலையில் சிக்கிய மான் போல
4. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல

16. பிறருக்கு வாரிவழங்குவதால் ஒருவருக்கு ஏற்படும் மகிழ்ச்சியினைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்

1. இகபரஇன்பம் 2. ஈத்துவக்கும் இன்பம் 3. இறுதியிலின்பம் 4. பேரின்பம்

17. ''எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்'' இங்கு இடம்பெறும் விரைவுக்குறிப்புச் சொல்

1. எழுந்த 2. கொழுங்க 3. கனலென்ன 4. எழுந்தார்

18. காயப்பட்ட இடத்திலிருந்து குருதி குபீர்குபீர் எனப்பாய்ந்தது. இங்கு **குபீர்குபீர்** என்பது

1. அடுக்குமொழி 2. அடுக்குத்தொடர் 3. இணைமொழி 4. இரட்டைக்கிளவி

19. ''கடிநகர்'' என்பதில் **கடி** எனும் உரிச்சொல் உணர்த்தி நிற்கும் பொருள்.

1. வாசனை 2. கூர்மை 3. காவல் 4. அழகு

20. பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் **அமையாத** சொல்

1. அடி 2. முடி 3. இடி 4. நட

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகச்சரியான விடையைத்தெரிவு செய்க**

21. நேற்று இரவு அடை மழை பொழிந்தது.
குளம் நிரம்பவில்லை.
மேற்படி இரு வாக்கியங்களையும் இணைக்க மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1. எனவே 2. எனினும் 3. ஆகவே 4. அதற்காக

22. 'கூலிக்கு வேலை செய்தான்' இது எவ்வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது

1. தகுதி 2. முதற்காரணம் 3. நிமித்தகாரணம் 4. கொடை

23. உடனிலை மெய்ம்மயக்கத்திற்கு உதாரணமாக அமைவது

1. இஞ்சி 2. தெவ்வர் 3. பந்து 4. தட்பம்

24. கண்டான் என்ற சொல்லின் பகுதியாக அமைவது

1. கண் 2. கண்டு 3. காண் 4. காணு

25. பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாக வருவது

1. தமிழிலக்கியம் 2. பெண்ணழகு 3. மாம்பழம் 4. பனையோலை

26. கவிஞரும் போற்றிய மனிதர். இங்கு **உம்** இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1. இழிவுச்சிறப்பு 2. உயர்வுச்சிறப்பு 3. முற்று 4. ஐயம்

27. **"க"** மாற்றொலியனாக **அமையாத** சந்தர்ப்பம்

1. கப்பல் 2. தங்கம் 3. பாகல் 4. சிகரம்

28. பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றிய வினை **அல்லாதது**

1. எழு 2. இரு 3. நட 4. எடு

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெறும் சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1. வினையெச்சம் - படித்து, எறிந்து, ஓடி

2. ஏவல் வினை - நில், படி, வா

3. தெரிநிலைவினை - வந்தான், கரியன், செய்தேன்

4. குணப்பெயர் - செம்மை, கோபம், வெண்மை

30 1. ஆக்கப்பெயர் - அறிவாளி, அறிவியல், பயிற்சி

2. கூட்டுப்பெயர் - நீரேரி, வானொலி, படித்தல்

3. கூட்டு வினை - தந்தியடி, சீரழி, தட்டிக்கழித்தல்

4. தொழிற்பெயர் - போதல், பாய்தல், போனமை

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு………………வழங்கியது.

1. நன்கொடை 2. உதவி 3. மானியம் 4. நிவாரணம்

32. பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பின் இருபதாவது ………………..நிறைவேற்றப்பட்டது.

1. உடன்படிக்கை 2. திருத்தச்சட்டம் 3. வேட்புமனு 4. சுற்றுநிருபம்

33. பாடசாலையில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக பார்வையிடுவதற்கு அதிகாரிகள் வரப் போவதாக அதிபர்……………….. கூறினார்.

1. ஆணை 2. கட்டளை 3. சுற்றுநிருபம் 4. அறிவுறுத்தல்

34. வறியவர்களுக்கு உணவும் உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்……………….எனப்படும்.

1. மடம் 2. முதியோர் இல்லம் 3. ஆச்சிரமம் 4. ஆதுலர்சாலை

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. கல்விச்சீர்திருத்த ஆணைக்குழுவினர்……..

1. பல ஆலோசனைகளை முன்வைத்தனர்.

2 பல ஆலோசனைகளை முன்வைத்தது.

3 பல ஆலோசனையை முன்வைத்தது.

4 பல ஆலோசனைகளை முன்வைத்தன.

- **தரப்பட்ட பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

புனலும் நிலாவொளியும் - அங்கு
புதுமை செய்தே நெழிந்தோடும்: மரங்களில்
இனிது பறந்து பறந் - தங்கும்
இங்கும் அடங்கிடும் பாடிய பறவைகள்
தனியொரு வெள்ளிக் கலம் - சிந்தும்
தரளங்கள் போல்வன நிலவு நட்சத்திரம்
புனையிருள் அந்தி பெண்ணாள் ஒளி
போர்த்ததுண்டோ எழில் பூத்ததுண்டோ

36. இங்கு கவிஞர் விபரிக்கும் காட்சி
 1. காலைப்பொழுது  2. மாலைப்பொழுது  3. நிலவுக் காட்சி  4. வைகறைப் பொழுது

37. வெள்ளிக்கலம் எனக் குறிப்பிடப்படுவது
 1. நிலவு  2. அந்திப்பொழுது  3. நட்சத்திரம்  4. பறவைகள்

38. தரளங்கள் எதற்கு ஒப்பிடப்படுகின்றன
 1. நட்சத்திரம்  2. வெண்ணிலவு  3. வானம்  4. பெண்

39. இக் கவிதையில் இளையோடும் சுவை
 1. வியப்பு  2. திகைப்பு  3. நகைப்பு  4. உவப்பு

40. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தி அமையும் அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. தலைச்சங்கத்தின் அழிவினால் அரசரும் புலவரும் நிலைகுலைந்து போகவில்லை.
ஆ. கடல்கோளின் பின் கபாடபுரத்தில் இடைச்சங்கம் தனது சேவையைத் தொடர்ந்தது.
இ. இடைச்சங்கம் தலைச்சங்கத்தின் மாதிரிக்கமைய அமைக்கப்பட்டது.
ஈ. தலைச்சங்கம் கடல்கோளினால் பாரிய பாதிப்பை அடைந்தது.
உ. இடைச்சங்கம் தனது ஆட்சியை மிகச் சிறப்பாக நடத்தியது.

1. அ ஆ இ ஈ உ  2. ஈ அ ஆ இ உ  3. இ அ ஈ உ ஆ  4. இ அ ஈ ஆ உ

(40×1=40 புள்ளிகள்)